(b) if so, to place a copy[a] on the table of the House?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள மீனவர்கள் ஜனத்தொகை 1957-58-ல் எடுக்கப்பட்டது. மாவட்ட வாரியாக அவர்களுடைய ஜனத்தொகை 1957-58-ம் ஆண்டிற்கான மீன்வளத் துறை நிர்வாக அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தது. 1957-58-ல் இம் மாநிலத்தில் இருந்த மீனவர்கள் ஜனத்தொகையைக் காட்டும் ஓர் அறிக்கை [a] சட்ட சபையில் வைக்கப்பட்டுள்ளது.

• வித்வான் டி. முத்துக்கண்ணப்பன் : ஐயா, மொத்தத்தில் 2 லட்சத்து 77 ஆயிரம் மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இந்து மதத்தவர் எத்தனை பேர், மற்றவர்கள் எத்தனை பேர் என்று சொல்லமுடியுமா ?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லமுடியும்.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : சார், மீனவர்கள் என்று எப்படிக் கணக்கு எடுக்கப்படுகிறது ?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மீன் பிடிக்கக்கூடிய தொழிலைச் சார்ந்தவர்கள் மீனவர்கள் என்று கணக்கெடுக்கப்படுகிறது.

திரு. எம். சுப்பையா செட்டியார் : மீன் வகையில் ஏதாவது இப்படி வித்தியாசம் இருக்கிறதா ?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பல வகை மீன்கள் இருக்கின்றன.

MR. CHAIRMAN : Questions are over.

**[ *Note.*—An asterisk (*)at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENTS.

### (1) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

MR. CHAIRMAN : I have to inform the House that the following candidates have been validly nominated for election of nine members to the Committee of Privileges for the financial year 1963–64 :—

1. Dr. A. Lakshmanaswami Mudaliar.
2. The Hon. Sri R. Venkataraman.
3. Sri K. Rajaram.
4. Srimathi Mary C. Clubwala Jadhav.
5. Sri S. T. Adityan.
6. Sri A. Chidambara Mudaliar.
7. Sri T. Joghee Gowder.
8. Dr. A. Chidambaranathan.
9. Sri A. K. Thangavel Mudaliar.

---

[a] Printed as Appendix on page 458.

[Mr. Chairman] [9th March 1963

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, nine, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Chairman is ex-officio a member.

Under rule 156 (4) of the Council Rules, I have nominated Dr. A. Lakshmanaswami Mudaliar to be the Chairman of the Committee.

### (2) ELECTION OF MEMBERS TO THE HOUSE COMMITTEE.

MR. CHAIRMAN : I have also to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1963–64 :—

1. Sri K. Ramadass.
2. Sri J. Ponnusamy Villavarayar.
3. Sri R. Venkatachalam.
4. Sri M. Rajah Iyer.
5. Sri V. M. Surendra Ram.
6 Srimathi Saraswathi Pandurangam.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under Rule 173 (1) of the Council Rules, I nominate the following two members to be the members of the said Committee :—

1. Sri K. Rajaram.
2. Sri S. K. Sambandhan.

The Deputy Chairman of the Council shall be ex-officio the Chairman of the Committee.

### III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1963–64—*cont.*

MR. CHAIRMAN : We will now continue the discussion on the Budget for the year 1963–64. I fix a time-limit of ten minutes for each hon. Member.

** திரு. எம். சுப்பையா செட்டியார் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1963-64 வருஷத்திய சென்னை சர்க்கார் பட்ஜெட் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல தங்கள் அனுமதியைக் கோர விரும்புகிறேன். இந்த நடப்பு வருஷத்தில் கிட்டத்தட்ட 125 கோடி ரூபாய் வருவாய் என்றும் 127 கோடி செலவு என்றும் காணப்பட்டது. 274 லட்சம் ரூபாய் துண்டுவிழுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டில் புதுவரிகள் இல்லையென்ற பாவனையில் நமக்கு இந்த நிதிநிலையைத் தெரிவித்திருக்கிறார்கள். சமீபத்தில்தான் நிலத்திற்குத் தீர்வையும்*